இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 08-10-2025

# ஆர்.என்.ரவியை எதிர்த்து போராடும்!

‘தமிழ்நாடு யாரை எதிர்த்துப் போராடும்?’ என்று கேட்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. அவருக்கு புரிகிற மாதிரி சொல்ல வேண்டுமானால், **‘தமிழ்நாடு ஆர்.என்.ரவியை எதிர்த்துப் போராடும்’**. ஆர்.என்.ரவியை வெல்லும் தமிழ்நாடு.

**“ஆளுநர் பதவியில் இருந்து ரவியை மாற்றாதீர்கள். மாற்றி விடாதீர்கள். அவர் இருப்பதுதான் எங்களுக்கு நல்லது. அவர்தான் எங்களது கொள்கைக்கு உரம் சேர்த்து வருகிறார்” என்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னதன் உள் அர்த்தம் கூடப் புரியாமல் இந்த நாட்டுக்குள் ரவி உலா வருவதைப் பார்த்து நம்மை நாமே நொந்து கொள்ள வேண்டியதுதான்.**

**கொஞ்சமாவது ... இருந்தால், முதலமைச்சர் இப்படிச் சொன்ன மறு நாளே ரவி, தனது பதவியை விட்டு விலகி சொந்த ஊர் போய்ச் சேர்ந்திருப்பார். எதுவும் இல்லாததால்தான் இன்னமும் கோட் சூட் போட்டு சுற்றிக் கொண்டு இருக்கிறார்.**

உச்சநீதிமன்றம், ரவியின் உச்சந்தலையில் கொட்டியது நினைவுக்கு இருக்கிறதா? நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு ரவியின் நாக்கைப் புடுங்குவதைப் போல கேள்விகள் கேட்டது.

*** சட்டமன்றத்தில் இருமுறை நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், குடியரசுத் தலைவருக்கு அதனை அனுப்பி வைத்தது சட்டவிரோதம்.**

*** மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் கண்டிப்பாக ஒப்புதல் அளித்திருக்க வேண்டும்.**

*** ஆளுநர் ஆர்.என் ரவியின் செயல்பாடு நேர்மையானதாக இல்லை.**

*** பொதுவான விதிப்படியும், மாநில அரசின் ஆலோசனையின் படியும் மட்டுமே ஆளுநர் செயல்பட முடியும்.**

*** மாநில அரசுக்கு ஆளுநர் வீண் தடைகளை ஏற்படுத்தக் கூடாது. அது மக்கள் நலன்களை பாதிக்கும் என்றும் நீதிபதிகள் அறிவுரை வழங்கினர்.**

*** மாநில அரசுக்கு வழிகாட்டுபவராக ஆளுநர் இருக்க வேண்டுமே தவிர, அரசியல் எதிரி போல் செயல்பட கூடாது.**

*** தன் விருப்பம்போல் ஆளுநர் செயல்பட முடியாது.**

*** தனக்கு சிறப்பு அதிகாரம் இருப்பதாக கருதுவது தவறு.**

*** ஆளுநர் தன்னிச்சையாக செயல்பட முடியாது.**

*** அரசின் செயல்பாடுகளுக்கு இடையூறாக இருக்கக் கூடாது.**

*** ஆளுநர் அரசியல் நோக்கத்துடன் வழிநடத்தப்படாமல், எடுத்துக் கொண்ட அரசமைப்பு உறுதிமொழியால் மட்டுமே வழிநடத்தப்பட வேண்டும். முரணாக அமையும் எந்த நடவடிக்கையும் அரசமைப்புப்படி எடுத்துக் கொண்ட உறுதிமொழியை மீறுவது ஆகும்”** என்றும் நீதிபதிகள் எச்சரித்தார்கள்.

இத்தோடு நிறுத்தாமல் 10 மசோதாக்கள் விவகாரத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவியின் நடவடிக்கைகள் ரத்து செய்யப்படுகிறது என்றும், இரண்டாவது முறையாக குடியரசுத் தலைவருக்கு அவர் மசோதாக்களை அனுப்பி வைத்தது செல்லாது என்றும் நீதிபதிகள் அறிவித்தனர். அரசியல் சாசனப் பிரிவு 142 இன் கீழ் உச்சநீதிமன்றத்துக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது என்றும், இந்த மசோதாக்கள் அனைத்தும் உடனே சட்டமாகி நடைமுறைக்கு வருவதாகவும் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். சொரணை இருந்திருந்தால் அன்றே சென்னையை விட்டு வெளியேறி இருப்பார் ரவி. உடனிருந்து கொல்லும் வியாதியாக அவர் உருமாறி விட்டார்.

ஒரு மாநிலத்துக்கு ஆளுநராக நியமிக்கப்பட்ட ஒருவர், அந்த மாநிலத்துக்கு உதவி செய்ய முடிந்தால் உதவி செய்ய வேண்டும். உதவி செய்ய முடியாவிட்டால் தொல்லை செய்யாமலாவது இருக்க வேண்டும். ரவிக்கு தமிழ்நாட்டின் மீது இருப்பது பொறாமை. அதுதான் வஞ்சகமாக வளர்ந்திருக்கிறது.

தமிழ்நாடு இந்தளவு வளர்ந்துள்ளதே, இதனை ‘திராவிடம்’ செய்து கொடுத்துள்ளதே என்ற வஞ்சகம்தான் ஆர்.என்.ரவியை ஆட்டிப் படைக்கிறது. ‘திராவிடத்தால் தங்கள் அதிகாரத்தை, மேட்டிமைத்தனத்தை இழந்த ஒரு கூட்டம்’ தமிழ்நாட்டில் இருக்கிறது அல்லவா? அந்தக் கும்பல், ஆர்.என்.ரவியைச் சுற்றி வளைத்துக் கொண்டு விட்டது. ‘துக்ளக் படித்து அறிவாளி’ ஆன கும்பல் இது. இந்தக் கும்பலில் சிலரின் கைப்பாவையாக ஆளுநர் ரவி ஆனார். திருவள்ளுவரை சனாதனவாதியாக ஆக்குவதும், வள்ளுவருக்கு காவி வேட்டி கட்டுவதும் அவர்களது ஆரிய நோயின் வெளிப்பாடுகள்தான்.

தமிழ்நாடு வளரவில்லை, தமிழ்நாட்டு மாணவ, மாணவியருக்கு அறிவு இல்லை, இளைஞர்களுக்கு திறமை இல்லை, பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை, சட்டம் ஒழுங்கு கெட்டுக் கிடக்கிறது, தொழில் நிறுவனங்கள் வராதீர்கள்... இது தான் ஆர்.என்.ரவி தனது ஆளுகை காலத்தில் எடுத்த வார்த்தை வாந்திகள் ஆகும். இப்படி எல்லாம் பேசும் ஒருவரை எந்த மாநிலத்திலும் வைத்திருக்க மாட்டார்கள். நாம் ஏன் விட்டு வைத்திருக்கிறோம் என்றால் காலம் காலமாக தமிழனை உணர்ச்சியோடு வைத்திருப்பது இந்த மாதிரியான ஆட்கள் தான். தமிழர்களுக்கு சொரணை ஊட்டுவதற்காகத்தான் இவர்களை விட்டு வைத்திருக்கிறோம்.

**ஆர்.என்.ரவி பேசட்டும். அவர் பேசப் பேசத்தான் தமிழ்நாடு உணர்ச்சி பெறும். அவர் பேசப் பேசத்தான் தமிழ்நாடு எழுச்சி பெறும். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்.**



புதுக்கோட்டை மாவட்டம் / மாநகராட்சி நகர்மன்ற வளாகத்தில், புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்தும், 8ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவினை, அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் தொடங்கி வைத்து, பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டனர். உடன் எம்.சின்னத்துரை எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, கே.கே.செல்லப்பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## பல்நோக்கு மையங்கள் – அறிவுசார் மையங்கள் திறப்பு!

# ரூ.209.18 கோடியில் சமூகநீதி விடுதிகள் - பள்ளிக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, அக். 8 -**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.209.18 கோடி செலவிலான 20 சமூகநீதி விடுதிகள், 37 பள்ளிக் கட்டடங்கள், தொல்குடி திட்டத்தின் கீழ் 250 வீடுகள், 16 கிராம அறிவுசார் மையங்கள் மற்றும் 9 பல்நோக்கு மையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, ரூ.13.41 கோடி செலவில் 68 வாகனங்களின் பயன்பாட்டினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.10.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 137 கோடியே 31 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 20 சமூகநீதி விடுதிக் கட்டடங்கள், 39 கோடியே 29 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் 39 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கான வகுப்பறை கட்டடங்கள், 12 கோடியே 72 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் பழங்குடியினர்களுக்கு தொல்குடி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 250 வீடுகள், 15 கோடியே 93 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 கிராம அறிவுசார் மையங்கள், 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 பல்நோக்கு மையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மேலும், பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 62 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் 23 வாகனங்கள் மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிதியிலிருந்து 3 வாகனங்கள், என மொத்தம் 26 வாகனங்கள் மற்றும் பழங்குடியின மக்களின் மருத்துவப் பயன்பாட்டிற்காக 5 கோடியே 78 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவில் 25 அவசரகால ஊர்திகள், 4 கோடி ரூபாய் செலவில் 20 நடமாடும் மருத்துவ ஊர்திகள் ஆகியவற்றின் பயன்பாட்டினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூகபொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை கட்டுதல், அம்மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் மற்றும் கட்டணச் சலுகைகள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குதல், சுயதொழில் / வேலைவாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதிக் கட்டடங்கள்!**

கடலூர் மாவட்டம் - காட்டுமன்னார் கோயிலில் 2 விடுதிகள், சேத்தியாதோப்பு, திருவண்ணாமலை மாவட்டம் - வந்தவாசி, வேட்டவலம் மற்றும் புளியம்பட்டி, விழுப்புரம் மாவட்டம் - செஞ்சி, விருதுநகர் மாவட்டம் - ஸ்ரீவில்லிப்புத்தூர், நாமக்கல் மாவட்டம் - செங்காரை, கள்ளக்குறிச்சி மாவட்டம் - இன்னாடு ஆகிய இடங்களில் 58 கோடியே 98 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான 10 சமூகநீதி விடுதிக் கட்டடங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் - கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டம் - கூடலூர், மு.பல்லடா, மதுரை மாவட்டம் - சொக்கிக்குளம், நாமக்கல் மாவட்டம் - இலத்துவாடி, வேலூர் மாவட்டம் - ஒட்டேரி, விழுப்புரம் மாவட்டம் - திண்டிவனம், கடலூர் மாவட்டம் - கடலூர், திண்டுக்கல் மாவட்டம் - பழனி, திருவாரூர் மாவட்டம் - நன்னிலம் ஆகிய இடங்களில் 78 கோடியே 33 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான 10 சமூகநீதி விடுதிக் கட்டடங்கள்;

என மொத்தம் 137 கோடியே 31 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான 20 சமூகநீதி விடுதிக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிக் கட்டடங்கள்!**

வேலூர் மாவட்டம் - பெருமுகை, இராணிப்பேட்டை மாவட்டம் - ஜாகீர் தண்டலம், திண்டுக்கல் மாவட்டம் - வி.குரும்பப்பட்டி, முருகன்பட்டி, பெரும்பாறை, தேனி மாவட்டம் - அம்மச்சியாபுரம், கரூர் மாவட்டம் - புன்னம், பெரம்பலூர் மாவட்டம் - பொம்மனப்பாடி, நத்தக்காடு, திருநெல்வேலி மாவட்டம் - கடம்பன்குளம், தூத்துக்குடி மாவட்டம் - திருமங்கலக்குறிச்சி, தஞ்சாவூர் மாவட்டம் - மனோஜிபட்டி, அகரப்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் - கவரை மற்றும் கொந்தமூர், கடலூர் மாவட்டம் - சேமக்கோட்டை, மா.கொளக்குடி, ஊமங்கலம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - களத்தூர், இன்னாடு, மணியார்பாளையம், பாச்சேரி, திருவள்ளூர் மாவட்டம் - பூங்காத்தூர், தேர்வாய், கோலப்பன்சேரி, செங்கல்பட்டு மாவட்டம் - கிளாம்பாக்கம், பதுவஞ்சேரி, காஞ்சிபுரம் மாவட்டம் - பாலூர், ஓரிக்கை, திருப்பூர் மாவட்டம் - கோவில்வழி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - காட்டூர் பாப்பாக்குறிச்சி, சோழமாதேவி, சிவகங்கை மாவட்டம் - அதிகாரம், கோயம்புத்தூர் மாவட்டம் - தொண்டாமுத்தூர், சேலம் மாவட்டம் - மாட்டுக்காரனூர், ஈரோடு மாவட்டம் - பர்கூர், திருவண்ணாமலை மாவட்டம் - அரசவெளி ஆகிய இடங்களில் 39 கோடியே 29 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 37 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கான வகுப்பறை கட்டடங்கள், அறிவியல் ஆய்வுக்கூடங்கள் உள்ளிட்ட கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பழங்குடியினர்களுக்கு தொல்குடி திட்டத்தின் கீழ் 250 வீடுகள்!**

பழங்குடியினர்களுக்கு தொல்குடி திட்டத்தின் கீழ், திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல், தேனி, தருமபுரி, நாமக்கல், சேலம், தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி, அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கிருஷ்ணகிரி, இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, திருப்பத்தூர், கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் நவீன முறையில் வசிப்பறை, படுக்கையறை, சமையலறை, கழிப்பறை, மரக்கதவு, UPVC ஜன்னல், மின் இணைப்பு, Bio Septic Tank, பின் பக்க வராண்டா, மாடிக்குச் செல்ல படிக்கட்டு உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் 12 கோடியே 72 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 250 வீடுகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**16 கிராம அறிவுசார் மையங்கள்!**

கடலூர் மாவட்டம் - காரைமேடு, திருப்பத்தூர் மாவட்டம் - துரையேறி, திருப்பூர் மாவட்டம் - கொலுமாங்குளி, ஈரோடு மாவட்டம் கொத்தமங்கலம், பிரம்மதேசம், எண்ணமங்கலம், இமாம்பூண்டி, கோயம்புத்தூர் மாவட்டம் - கொத்தவாடி, எஸ்.பி.வடுகபாளையம், சேலம் மாவட்டம் வெள்ளாலகுண்டம், நடுவலூர், காரிப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் - தொட்டனூத்து, தருமபுரி மாவட்டம் மருதிப்பட்டி, பெரியபட்டி, வெள்ளாளபட்டி ஆகிய இடங்களில் 15 கோடியே 93 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 கிராம அறிவுசார்மையங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பழங்குடியினர்களின் பயன்பாட்டிற்காக 9 பல்நோக்கு மையங்கள்!**

விழுப்புரம் மாவட்டம் நல்லபாளையம், அம்மன்குளத்துமேடு, தேனேரி, ஒலுண்டியம்பட்டு, கடலூர் மாவட்டம் ஸ்ரீ இராஜாகணபதி நகர், மேலூர், செங்கல்பட்டு மாவட்டம் அன்னை சத்யா நகர், கால்பாய், திருவண்ணாமலை மாவட்டம் - கலிங்கலேரி ஆகிய இடங்களில் 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 பல்நோக்கு மையங்களை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளின் பயன்பாட்டிற்காக 26 புதிய வாகனங்கள்!**

திருச்சிராப்பள்ளி, தருமபுரி, சேலம், கள்ளக்குறிச்சி, ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் 3 கோடியே 62 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ள 23 வாகனங்கள் மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிதியிலிருந்து 3 வாகனங்கள், என மொத்தம் 26 வாகனங்கள் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**பழங்குடியின மக்களின் பயன்பாட்டிற்காக 25 புதிய அவசரகால ஊர்திகள் மற்றும் 20 புதிய நடமாடும் மருத்துவ ஊர்திகள்!**

தொல்குடி நல்வாழ்வுத் திட்டங்களின் மூலம் திண்டுக்கல், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட 5 கோடியே 78 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அவசரகால ஊர்திகளை (Ambulance) முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி, நாமக்கல், திண்டுக்கல், சேலம், நீலகிரி, திருவண்ணாமலை, திருச்சி, திருப்பத்தூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் பழங்குடியின மக்களின் மருத்துவ பயன்பாட்டிற்காக 4 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ள 20 புதிய நடமாடும் மருத்துவ ஊர்திகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ தலைவர் இளையராஜா, ஆதிதிராவிடர் நல ஆணையர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு. கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




நாமக்கல் கிழக்கு மாவட்டப் பொறியாளர் அணி அறிமுகக் கூட்டம் நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமானப் பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நாமக்கல் தெற்கு நகரச் செயலாளர் ராணா ஆனந்த், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, மோகனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பெ.நவலடி, பா.கிருபாகரன், எல்.திருஞானமூர்த்தி, உதயகுமார், இனியன், நேரு, பொன்.சித்தார்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.